## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.199/2024**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ம் நாள் வியாழன் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.S.குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **ரெங்கராஜன்** | **தொழில் :** | பணி ஓய்வு பெற்றவர் |
| **தந்தை பெயர் :** | **சேது கோனார்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | நடுவிக்குறிச்சி | **வயது** | 63 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**16.04.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த . 21.09.2024 ல் வழக்கு A ஷெடியூல் சொத்திலுள்ள வீட்டிற்கு நான் செலுத்திய கணினி சொத்து வரி ரசீது **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 18.08.2024 ல் வழக்கு A ஷெடியூல் சொத்தில் உள்ள வீட்டிற்கு நான் செலுத்திய கணினி மின்கட்டண ரசீது **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். என் பெயரிலுள்ள குடும்ப அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது) **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். 13.08.2024 ல் நான் திருச்சிற்றம்பலம் காவல் துறையில் கொடுத்த புகார் போட்டோ நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். நான் கொடுத்த புகாரின் பேரில் எதிர்வாதிகள் கொடுத்த கடிதம் போட்டோ நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். 13.09.2024 ல் நான் திருச்சிற்றம்பலம் காவல் துறையில் கொடுத்த புகார் போட்டோ நகல்

**வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். (***வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்கள் எதிர்வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது***) தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.